## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 8-4 - வார்கடாவருவி
**(எம்பெருமான் தனது வலிமையையும் பரிவர் பலர் இருப்பதையும் காட்ட, ஆழ்வார் திருச்செங்குன்றூரில் கண்டு மகிழ்தல்)**

3480 * வார்கடா அருவியானை மாமலையின் *
மருப்பிணைக் குவடிறுத்துருட்டி *
ஊர்கொள் திண்பாகன் உயிர் செகுத்து * அரங்கின்
மல்லரைக் கொன்று சூழ் பரண் மேல் **
போர்கடா அரசர் புறக்கிட * மாட
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த *
சீர்கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு எங்கள் செல்சார்வே 1

3481 எங்கள் செல் சார்வு யாமுடை அமுதம் *
இமையவர் அப்பன் என்னப்பன் *
பொங்கு மூவுலகும் படைத்தளித்து அழிக்கும் *
பொருந்து மூவுருவன் எம்மருவன் **
செங்கயலுகளும் தேம்பணை புடை சூழ் *
திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு
அங்கு அமர்கின்ற * ஆதியான் அல்லால் *
யாவர் மற்று என் அமர்துணையே? 2

3482 என்னமர் பெருமான் இமையவர் பெருமான் *
இருநிலம் இடந்த எம்பெருமான் *
முன்னை வல்வினைகள் முழுதுடன் மாள *
என்னை ஆள்கின்ற எம்பெருமான் **
தென்திசைக்கு அணிகொள் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாற்றங்கரை மீபால்
நின்ற எம்பெருமான் * அடியல்லால் சரண்[1]
நினைப்பிலும் * பிறிதில்லை எனக்கே 3

3483 பிறிதில்லை எனக்குப் பெரிய மூவுலகும்
நிறையப் * பேருருவமாய் நிமிர்ந்த *
குறிய மாண் எம்மான் குரைகடல் கடைந்த *
கோலமாணிக்கம் என்னம்மான் **
செறிகுலை வாழை கமுகு தெங்கணி சூழ் *
திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு
அறிய * மெய்ம்மையே நின்ற எம்பெருமான் *
அடியிணை அல்லதோர் அரணே 4

[1] சரணம்

3484 அல்லதோர் அரணும் அவனில் வேறில்லை *
அது பொருளாகிலும் * அவனை
அல்லது என்னாவி அமர்ந்தணைகில்லாது *
ஆதலால் அவன் உறைகின்ற **
நல்ல நான்மறையோர் வேள்வியுள் மடுத்த *
நறும்புகை விசும்பொளி மறைக்கும் *
நல்ல நீள்மாடத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு எனக்கு நல்லரணே 5

3485 எனக்கு நல்லரணை எனதாருயிரை *
இமையவர் தந்தை தாய் தன்னை *
தனக்கும் தன் தன்மை அறிவரியானைத் *
தடங்கடல் பள்ளி அம்மானை **
மனக்கொள் சீர் மூவாயிரவர் * வண்சிவனும்
அயனும் தானும் ஒப்பார் வாழ் *
கனக்கொள் திண்மாடத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு அதனுள் கண்டேனே 6

3486 திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு அதனுள்
கண்ட * அத்திருவடி என்றும் *
திருச்செய்ய கமலக் கண்ணும் செவ்வாயும் *
செவ்வடியும் செய்ய கையும் **
திருச்செய்ய கமல உந்தியும் செய்ய
கமல[2] மார்பும் * செய்ய உடையும் *
திருச்செய்ய முடியும் ஆரமும் படையும் *
திகழ என் சிந்தையுளானே 7

3487 திகழ என் சிந்தையுள் இருந்தானைச் *
செழுநிலத் தேவர் நான்மறையோர் *
திசை கைகூப்பி ஏத்தும் * திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற்றங்கரையானை **
புகர்கொள் வானவர்கள் புகலிடம் தன்னை *
அசுரர் வன்கையர் வெங்கூற்றை *
புகழுமாறு அறியேன் பொருந்து மூவுலகும் *
படைப்பொடு கெடுப்புக் காப்பவனே 8

3488 படைப்பொடு கெடுப்புக் காப்பவன் * பிரம
பரம்பரன் சிவப்பிரான் அவனே *
இடைப்புக்கோருருவும் ஒழிவில்லை அவனே *
புகழ்வில்லை யாவையும் தானே **
கொடைப் பெரும்புகழார் இனையர்[3] தன்னானார் *

---

[2] கமலை

கூறிய இச்சையோடு ஒழுக்கம் *
நடைப்பலி இயற்கைத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு அமர்ந்த நாதனே 9

3489 அமர்ந்த நாதனை அவரவராகி *
அவர்க்கருள் அருளும் அம்மானை *
அமர்ந்த தண்பழனத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாற்றங்கரையானை **
அமர்ந்த சீர் மூவாயிரவர் * வேதியர்கள்
தம் பதி அவனி தேவர் வாழ்வு *
அமர்ந்த மாயோனை முக்கண் அம்மானை *
நான்முகனை அமர்ந்தேனே 10

3490 * தேனை நன்பாலைக் கன்னலை அமுதைத் *
திருந்துலகுண்ட அம்மானை *
வான நான்முகனை மலர்ந்த தண்கொப்பூழ் *
மலர்மிசைப் படைத்த மாயோனை **
கோனை வண்குருகூர் வண்சடகோபன் *
சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் *
வானின் மீதேற்றி அருள் செய்து முடிக்கும் *
பிறவி மாமாயக் கூத்தினையே 11

**அடிவரவு:** வார் எங்கள் என் பிறிது அல்லது எனக்குத் திரு
திகழ படை அமர் தேனை மாய

[3] எனையர்